பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சாலருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை 6 குருதலம், மாம்பாக்கம்; செய, ஆனி. 18—6—54 தளிர்–35

## வழிபாடு

உயிர், பலதிறப் பிறவிகள் தாங்கிப் பின்னர் மக்கட் பிறவி எய்துகிறது. மக்கட் பிறவியில் உயிர்க்கு ஆறுவதறிவான பகுத்தறிவு என்னும் மன அறிவு முகிழ்க்கிறது. இவ்வறிவு கொண்டு மன மாசுகளைப் போக்கி வாழ்க்கையை அற வழியில் நடாத்தல் வேண்டும். மேலும், அவ்வறிவு சிறப்பாகக் கடவுளுண்மையை உணரும் இயல்பினது. அவ்வியல்பைத் தக்காங்கு பண்படுத்தினாலன்றிக் கடவுளுண்மையை உணர்தல் இயலாது. அதற்கு வழிபாடு வேண்டற்பாலது வழிபாட்டி லிறங்கா மக்களின் ஆறுவதறிவு சிறைப்பட்டு ஒளிகுன்றும்; ஒளி குன்றுமானால் மக்கள் விலங்காதல் உறுதியாம்.

பகுத்தறியும் ஆறுவதறிவு பண்படுமேயானால் மற்ற அறிவுகளும் சால்புறும்; பண்படா தொழியின் ஏனைய ஐந்தறிவுகளும் ம்க்கட்பிறவியை இடர்ப்படுத்தும்; உலகமும் பெருந்துன்பமுறும்.

வழிபாட்டு முறைகள் அவரவர் அறிவாற்றலுக்குத் தக்கவாறு அமைதல் நலம். மக்கள் பிறவி தாங்கினோர்க்கு எவ்வகை வழிபாடாதல் இருத்தல் சிறப்பு.

வழிபாட்டுக்கு மகிழ்ச்சி அடிப்படை. வழிபாட்டு நேரத்தில் உவகையுடையார் மனம் விரைவில் ஒன்றும். எனவே, அவ் வழிபாடு தானும் சிறப்புற நடைபெறும்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—
கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | செய, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 6 | 18-6-54 வெள்ளி. | 35 |


# முடிவில் இந்திய வரலாறு!

துளி நஞ்சு குடம் பாலையே கெடுப்பதுபோல், விடுதலை இந்தியாவில் மிகச் சிறிய அன்னிய திட்டுகள் இருந்து வருகின்றன. அடிமை நச்சுமரத்தை வெட்டி வீழ்த்தியது மட்டும் போதாது; அதன் ஆணி வேரையும் அழித்தாக வேண்டும். அப்போதுதான் இந்திய பூமி சிந்தை ஈர்க்கும் சோலையாக—சுதந்திர மண்ணாக மாற முடியும்.

அத்தகைய இறுதி விடுதலைப் போருக்குப்புதுவைமக்கள் முரசு கொட்டி விட்டார்கள்! இந்திய விடுதலை வரலாற்றின் முகவுரைக்குச் செந்தமிழ் வீரன் கட்டபொம்மன் முடிவுரைக்கு விந்தை மிக்க விவேகிகளை ஈன்ற தமிழகத்துப் புதுவை கொட்டுகிறது முரசு

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றைப் பாருக்குப் பறை சாற்றிய பிரான்சு நாடு, இந்தியப்பகுதியின் மேல் கொண்டுள்ள ஆதிக்கத்தை அகற்ற மறுக்கிறது. விடுதலை வீரர்களைச் சிறைக் கூடத்திற்கு அனுப்புகிறது; தடி கொண்டு தாக்குகிறது; குண்டர்களை ஏவித் தொண்டர்களைக் கொடுமைப் படுத்துகிறது; ஆதிக்கம் இறுதியில் அழிந்துபோகும் என்பதை மறந்து..........?

புரட்சிப்படை அறுபது கிராமங்களுக்கு, மேலாக ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுவித்திருக்கிறது!

புதுவையில் மூண்டிருக்கும் ஆதிபத்தியத் தீயை அணைக்க அம் மக்கள் முனைந்து விட்டார்கள். கட்சி, மதம் வேறுபாடின்றி யாவரும் அக் கடுந்தீயை அணைக்கும் பணியில் சேரவேண்டும். தீ பிற பகுதிகளுக்குப் பரவாதவாறு தடுக்கவேண்டும். வீடு பற்றி எரியும்போது வீணை வாசிக்கக் கூடாது.

கப்பம் கட்ட மறுத்து, தூக்கு மேடையை முத்தமிட்ட கட்டபொம்மனை கருத்தில் கொண்டு, மக்கள் உள்ளத்தில சுதந்திரக்கனல் மூட்டி, சிறையில் செக்கிழுத்த செம்மல் வா. ஊ. சியை வழிப்பாடி, கொடிக்கு உயிர் கொடுத்த குமானின் சமாதிக்கு வெற்றி மாலை சூட்டி விடுதலைப் போருக்கு அத்தனை பேரும் புறப்படவேண்டும்!

வேறு நாடாக இருந்தால், மத்திய அரசாங்கத்தினர் ஒதுங்கி இருக்க மாட்டார்கள், பெரும்போர் மூண்டிருக்கும். அண்ணல் காந்தியின் அன்பு நெறியில் நிற்கும் இந்திய அரசாங்கம் இன்னும் அமைதியாக இருந்து, கவனிக்கிறது. பேராசை பிடித்தபேரரசுகளுக்கு அறிவுத் தீபமாக விளங்குகிறது. அமைதியான முறையில் ஆதிக்கத்தை வழியனுப்ப விரும்புகிறது.

பிரான்சு அரசியலாருக்கு விவேகமும், விரிவுள்ளமும் இருக்குமாகில், ஆங்கிலேயர் செய்தது போல் உடனடியாகத் தங்கள் ஆதிக்கப் பகுதிகளுக்கு விடுதலை நல்க வேண்டும். காலனிகளை விட்டு வெளியேற வேண்டும். அப்போதுதான் உலக அமைதி' என்று வாய்கிழியப் பேசும் வேடத்திற்கு முற்றுப் புள்ளி வைத்ததாகும்.

—செ. கிருட்டினசாமி.


**Phone 55034 Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கிருட்டிண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# ஆவுந் தமிழரும்

(ஞா. தேவநேயன்)

(முன் தொடர்ச்சி

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின்" (560)

என்று வள்ளுவர் கூறுவதால் ஆவின் பயன்பாடு உணரப்படும்.

"ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற் கிரவின் இளிவந்த தில்"

என்பது இரவைக் கண்டிப்பினும் ஆவின் அருமையை உணர்த்தாது போகவில்லை.

ஆவும் ஆவேறும் (காளையும்) மிகப்பயன்படுவது பற்றி அவற்றின் வரவு கண்டு முறையே 'என் அம்மை வந்தாள், அவளுக்குப் புல்லிடு' 'என் அப்பன் வந்தான், அவனுக்குத் தண்ணீர் காட்டு' என்று அன்புரைகளைக் கூறிவந்தனர் உழவர். இவை திணை வழுவுக்கெடுத்துக் காட்டாக இலக்கணத்தில் வழிவழி கூறப்பட்டன. அதோடு, சாத்தன் சாத்தி, கொற்றன் கொற்றி, முடவன் முடத்தி, கொடும்புறமருதன் கொடும்புற மருதி முதலிய மக்கட் பெயர்களையே ஆவுக்கும் ஆவேற்றுக்கும் இட்டு அழைத்தனர். இவை, இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயர் என மூவகை விரவுப் பெயராகத் தொல்காப்பியத்திற் கூறப்பட்டன. (சொல் 174) 'சாத்தன் வந்தது' 'முடவன் வந்தது,' 'சாத்தன் புற்றின்னும்,' 'சாத்தி கன்றீனும்' முதலிய சொல்லதிகார வுரை யெடுத்துக் காட்டுகளை நோக்குக.

காளை மக்கட்காக மிக உழைத்ததினால் 'மாடுபோலுழைத்தல்' என்னும் வழக்கெழுந்தது. காளை விடலை என்னும் பெயர்கள் உவமையாகு பெயராக மறவர்க்கும் குறும்பர்க்கும் வழங்கி வந்தன. இடையூற்றைப் பொருட்படுத்தாமல் எடுத்த காரியத்தை முடிக்கும் திறவோன் பகடென்ப் புகழப்பட்டான்.

"மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து" (624)

இளைஞரின் வலிமையை யறிதற்கு 'ஏறுதழுவல்' (கொல்லேற்றைப் பிடித்து நிறுத்தல்) அளவையாகக் கொள்ளப் பட்டது. முல்லை நிலத்திலுள்ள ஆயரும் ஏறுதழுவின இளைஞர்க்கே பெண் கொடுத்து வந்தனர்.

ஆவின் வாலையும் எருதின் வாலையும் பற்றி ஆழமான ஆற்றைக் கடந்தனர். எருது ஊர்தியாக உதவிப் பொதியுஞ் சுமந்தது. இன்றும் வண்டியிழுக்கிறது.

ஆவும் ஆவேறுமாகிய இரண்டும் மக்கட்குப் பயன்படுவதாயினும், அவற்றுள், ஆவே அமைதியுடைமையும் அமுதளித்தலும் இருபாற் கன்றீதலும் பற்றிச் சிறப்பாகப் போற்றப்பட்டது. 'பார்த்தாற் பசுப்போல, பாய்ந்தாற் புலிபோல' என்பது பழமொழி. ஆவுக்கு வாயுறை முப்பத்திரண்டறக் கொடைகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. இழக்கும் பொருளும் ஆவின் வாய்ப்பட்டால் ஆக்கமாம் என்னுங் கருத்தில், 'பாழாய்ப் போகிறது பசுவின், வாயிலே' என்னும் பழமொழி எழுந்தது. தான் உண்டதை மீட்டும் வாய்க்குக் கொணர்ந்து அசையிட்டுச் செரிக்கச் செய்வது பற்றி, ஆவானது நல்ல மாணாக்கர்க்கு உவமையாகக் கூறப்பட்டது.

ஆவின் தினவு தீர்த்தற் பொருட்டு, ஆவுரிஞ்சி யென்றும் ஆவுரிஞ்சுதறி யென்றும் ஆதீண்டு குற்றி யென்றும் சொல்லப்பட்ட தறிகள் ஊர் தொறும் நாட்டப்பட்டிருந்தன.

மக்களால் வாழ்த்தப்படும் பொருள்களுள் ஆவும் ஒன்றாயிற்று. 'அறுமுறை வாழ்த்து' என்னும் தொல்காப்பியப் பகுதியுரையில் (தொல். பொ. 81) "முனிவரும் பார்ப்பாரும் ஆனினையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகு" என்னும் அறுவரை வாழ்த்தல் என்று உரைத்தனர் நச்சினார்க்கினியர். மக்கள் நல்வாழ்விற்கு ஆவும் ஒரு காரணம் என்பதை உணர்ந்தே அதை வாழ்த்தினர் தமிழர்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்றார் திருஞான சம்பந்தரும்.

அந்தணர் - முனிவர். பார்ப்பார் - நூல் பார்ப்பவர். தமிழகத்தில் முதலாவது பார்ப்பார் என்றிருந்தவர் தமிழர். பின்னர் பிராமணரும் தொழிலொப்புமை பற்றிப் பார்ப்பார் எனப்பட்டார். முதலாவது, செம்மார் என்னுந் தமிழ் மரபினர் செருப்பு தைத்துக் கொண்டிருந்து, பின்பு வடக்கிருந்து வந்த சக்கிலிய ரென்னுந் தெலுங்கரும் தொழிலொப்புமை பற்றிச் செம்மார் எனப்படுதல் காண்க.

ஆக்கள் மக்களைப்போல் மட்டுமன்றி அவரினும் மேலாகத் தூய்மை அல்லது தெய்வத் தன்மை யுடையனவாகவுங் கரு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# உலகின் ஒரு மூலையிலே.....

(நாராயணசாமி)

அதோ ஈனக்குரல் கேட்கிறது. உள்ளத்தை உருக்குகிறது அக்குரலின் தன்மை ஆனால், அது மனதில் ஒரு பீதியையும் உண்டாக்குகிறது. நெஞ்சம் நடுங்குகின்றது. ஆம்! உண்மையிலேயே நடுங்குகின்றது. உடலும் நடுங்குகின்றது. அறிவற்று, ஆதரவற்று, பொருளற்று, புண்ணியமற்று, உண்ண உணவும், உடையும், உறையுளுமற்றுக் கிடக்கும் அந்த மனிதப் பூச்சிகளின் ஈனக்குரல் பெருமை பேசும் மனித சமுதாயம் வசிக்கும் இவ்வுலகின் ஒரு மூலையிலிருந்து கேட்கிறது பார்; உற்றுக்கேள். அக்குரலிலேயே எல்லாம் புரிந்து விடும்.

வாழ்க்கைக் களத்தின் சரிவிலே, நின்று ஓலமிடும்-இல்லை, முனகும் அந்த மனிதர்களின் ஈனக்குரலிலே யிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியவை மிகுதியும் இருக்கிறது. மனித சமுதாயம் பெருமையுடன் வாழ்வதாக எண்ணலாம். ஆனால் இவ்வுலகின் ஒரு மூலையிலிருந்து கேட்கும் அவ் வீனக்குரல் ஓயும் வரை நிம்மதி யிருக்காது; பெருமை பேச முடியாது. ஒரு கால் முடங்கியவனைப் போல் மனித இனமும் தம்மிடம் ஒரு குறையை வைத்துக் கொண்டு தான் இருக்கும்.

ஏழைகளுக்காகப் பாடுபட வேண்டுமென்று நினைப்பதற்கு முன் 'ஏழைகள் யார்?' என்று அறிந்து கொள்ளவில்லையே.

நாம் வாழ்கிறோமென்று பேசுகிறோமே யொழிய எப்படி வாழ்கிறோம் என்று அறிய வில்லையே.

நாம்தான் மனிதர்கள் என்று நினைத்தாலும் நம்மைச் சுற்றி நாலு சடலம் நிற்கிறதே.

நாம் பெருமையாகப் பேசும் போது நம் முள்ளம் ஏனோ நடுங்குகிறதே.

நமக்குத்தான் அறிவிருக்கிறது என்று நினைத்தாலும், அந்த ஈனக்குரல், அவ்விதம் நினைக்கும் துணிவைத் தர வில்லையே.

இந்தக் குரல் எப்பொழுது ஓயும் நாம் என்று சுகமாக வாழ்வோமோ!

கதிரவன் மறைவுக்குப் பின் கீழ் வானத்திலேயிருந்து கிளம்பும், செந்நிறமான பூரண மதியைப்போல் அழகாகத்தோன்றுகிறது இந்த மனித சமுதாயத்தைப் பார்த்தால். ஆனால், சிறிது நேரத்திற்குள் பூச்சுக் கலைந்து இயல்பான நிறத்தோடு விளங்கும் வெண்மதியிலே களங்கம் இருக்கிறது. புகழ் மயக்கத்திலே தன்னை மறந்து தெம்மாங்கு பாடும் மனித சமுதாயத்தின் ஒரு மூலையிலிருந்து கேட்கும் அந்த ஈனக்குரல் சந்திரனின் களங்கம் போன்றது.

ஆதவன் மறைந்தான் அந்திவேளை அழகாக இருக்கிறது. ஆனால் அதோ பேரிருளின் பெருத்த ஆரவாரம், பெருமகிழ்ச்சியைக் குலைக்கிறதே.

மனித சமுதாயம் அந்த ஈனக்குரலைக் கேட்கிறதா? கேட்கா விடினும் சதா அக்குரல் கேட்டுக் கொண்டுதான் இருக்கும். அது ஓயும் வரை மனித வர்க்கத்துக்கு நிம்மதியில்லை.

கடல் அலை பொங்கிக்கொண்டுதான் இருக்கும். பேரிருள் சூழ்ந்துக் கொண்டுதான் இருக்கும். பெருத்த இடியும், கண் பறிக்கும் மின்னலும் இருக்கத்தான் செய்யும். கார்மேகம் அடை மழை பொழிந்து அழிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது. வெய்யோன் கொளுத்தப் போகிறான். நிலா மங்கப் போகிறது. விண் மீன்கள் எரிந்து விழப் போகின்றன. பூமி வெடிக்கப் போகிறது. உலகத்திலே சண்டையும், சச்சரவும், பெரு நோயும், வந்து சதா துன்புறுத்திக் கொண்டே யிருக்கப் போகிறது. மனிதனைச் சுற்றி இத்தனை ஆபத்தும் காத்துக் கொண்டு இருக்கிறது. இதெல்லாம் நீங்க ஒரே வழி எதுமற்றுக் கிடக்கும் மனித சடலங்கள் உலகின் ஒரு மூலையிலிருந்து கொடுக்கும் அந்த ஈனக் குரலுக்குச் செவி சாய்த்து ஆவன செய்வதுதான். செய்ய வில்லையேல் நிச்சயம் ஆபத்து வரும். எச்சரிக்கை மீண்டும் அதோ கேட்கிறது பார் அந்தக் குரல்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# விஞ்ஞான விளக்கமும் மெய்ஞ்ஞான மேன்மையும்

(வே. ந. நாராயணன்)

(முன் தொடர்ச்சி)

சில காலத்தில் அறிவிற்கும் ஆசைக்கும் சுயநலமேமேலோங்கி நின்று துணைபுரிந்து செயல் படுத்துவதையுங்காண்கிறோம்.

மற்றும் சிலசமயங்களில்செயல் அறிவே மிகுந்து நின்று ஆசை எண்ணத்தையும் சுயநல மனப் பான்மையையும் பூர்த்தி செய்ய வில்லையா? அது போன்று முன்பு ஆசையும் சுயநலமும் முன்னேற் றத்திற்கும் பிரதான இடம் வகித் ததை உரைத்தோமல்லவா? அப் போதெல்லாம் மனிதன் தனக் கானவற்றையே காண முற்பட் டான். அல்லது அவன் கண்டது அவன்தேவையைஉடனேபூர்த்தி செய்வதாகவே பெரும்பாலும் அமைந்தது என்றுங் கூறலாம்

சில காலத்திற்குப் பின் ஆசை யும் சுயநலமும் குறைந்து அறிவு ஓங்கி நின்றது ஆசையும் தன் னலமும் தொடர்ந்து பல முறை எழுந்து எழுந்து பயிற்சி பெற்ற காரணத்தால் சரி-தவறு எனஉண ரும் அறிவு விரிவடைவ தாயிற்று அப்போது தான் சூழ்நிலையில் உள்ளதும் ஆனால் கடினமும் சிக் கலும் நிறைந்ததுமான கோள ஆராய்ச்சியிலும், நீராவி ஆராய்ச் சியிலும், மின்சார ஆராய்ச்சியி லும், காற்றின் தன்மையை அறிவதிலும், உயிரினங்களின் அமைப்பைக் காண்பதிலும், தாவரங்களின் வளர்ச்சியை அறிவதிலும், இயந்திர ஆராய்ச்சி யிலும் மனத்தைச் செலுத்தி, ஆசை எண்ணத்தை எழுப்பி, அறிவால் ஆராயத் தொடங்கி னர்.

ஆசையாலும், சுயநலத்தா லும் இவைகளை உட்பிரிவாகக் கொண்ட அறிவாலும் அன்றி கருவியாலும் — இயக்கத்தாலும் ஆராய முற்பட்டனர்.

இக்காலத்தையே "விஞ்ஞான ஆராய்ச்சியின் தொடக்க காலம்" என ஒருவாறு உரைக்க லாம் 50%க்கு மேல் பொருந்து வதால்.

ஒரு பொருளை, ஒரு தொழி லைத் தன் சக்தியாலன்றி, தனது தொடர்ந்த உதவியாலன்றி கருவி யின் உதவியாலும்—இயந்திரத் தின் உதவியாலும் இலகுவாக வும் விரைவாகவும் செய்ய வேண்டுமென என்று முயன் றனரோ அன்றே, அக்காலமே விஞ்ஞான வளர்ச்சித் தொடக்க காலமாம்.

கருத்தால் அறிந்தன மாறி கருவியால், இயந்திரத்தால் ஆராயப்பட்டது. ஒரு தொழி லைத் தன் சக்தியால், தன்னுட லுறுப்புக்களால் செய்ததை விடுத்து இயந்திரத்தால் செய்ய முற்பட்டனர்.

நாகரிகம் என்பது மாறி விஞ் ஞானமாகத் திகழ்ந்தது, சாதா ரணமாக இருந்தபோது நீர் எனப்பட்டது, உயர்ந்து எழும்பி ஓடும்போது அலை என மாறு வதுபோல.

நீர்த் தேக்கம் குறைந்திருந்த போது "ஏரி" எனப்பட்டது. நீர்த்தேக்கம் நிறைந்தும் பரந் தும் உள்ள போது கடல் போல மாறுவதையும் உதாரணமாகக் கொள்ளலாம்'

இவ் விஞ்ஞானம் பெரிதும் பொதுநலத்திற்குப் பயன்பட் டது. இதனால் நாடுகளுக் கிடை யில் நல்லெண்ணமும் தொடர் பும் ஏற்பட்டு ஓங்கி வளர்ந்தது விஞ்ஞானத்தை விளக்கிய சக் தியின் வளர்ச்சி.

நீராவியின் சக்தியால் இயங் கும் போக்குவரவு சாதனம் 1830ல் ஸ்டீபன்ஸன் என்பவ ரால் கண்டு பிடிக்கப் பட்டது.

பாரடே (Faraday) என்பவர் 1831-ல் மின்சாரத்தைத் தூண்டும்(Induction Of Currents) வகைகளைக் கண்டறிந்தார். இது மின்சாரத் தொழிற் சாலைகளை யும் மின்சார விஞ்ஞானத்தையும் உருவாக்கி உயர்வாக்கிற்று.

அறிஞர்கள் பலர் தொடர்ந்து ஆராய்ந்தனர். அதன் பயனாக மின்சார விஞ்ஞானம் விளக்கந் தந்து இருளைப் போக்கிற்று.

1859ஆம் ஆண்டில் அமெரிக் காவில் பிட்ஸ்பர்க் என்னுமிடத் தில் முதன் முதலாக எண் ணெய்க் கிணறுகள் தோண்டப் பட்டன.

இந்த எண்ணெயை எரி பொருளாகக் கொண்டு பொறி களை இயக்க டெய்ம்லர் என்பவரும் டீசல் என்பவ ரும் கண்டு பிடித்தனர். தாம்ஸன் கண்ட, அணுவிலிருந்து தகர்க் கப்படும் எலக்ட்ரானின் சக்தி தொலைக் காட்சி (Telivision)யை யும் ரேடியோவையும் இயங்கச் செய்து விஞ்ஞானத்தை விளக்கின.

இத்தகைய வளர்ச்சியின் காரணமாக, வைத்திய முறையிலே விஞ்ஞானம், உழவு முறையிலே விஞ்ஞானம், போக்குவரவு முறையிலே விஞ்ஞானம் இப்படியாக எங்கும் எதற்கும் விஞ்ஞானம் தங்கி மிளிர்ந்தது. இவ்வகையாம் விஞ்ஞானம் இன்னும் வையம் வியக்கும் பலப்பல பயனுள்ள புதுமைகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் கண்டுள்ளது.

ஊளையிட்டாலும் ஊாறியச் செய்ய முடியாத மனிதன் இன்று உதடசைந்தாலும் உலகறியச் செய்யும் வானொலியைக் கண்டுபிடித்தான்.

அலை கடலின் நீரைக் கண்டு நிலை தடுமாறிய மனிதன் இன்று அந் நீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலையும் உருவாக்கினன், எக்ஸ்-ரேவைக் கண்டு பிடித்தான்.

பல மைலுக் கப்பாலுள்ள நிலையை இருந்த விடத்திலிருந்தே காண டெலிவிஷனைக் கண்டான். இவ்வாருன முறையில் பல நல்ல பொருள்களைப் பயன்படும் விதத்தில தானறச் செய்தான.

இவ் விஞ்ஞானம் புற நிலைகட்குப் பெரிதும் தொண்டாற்றியமைப் போற்றத் தக்கதே.

இத்தகைய விஞ்ஞானம் வளர வழி வகை செய்த வெளி நாட்டுப் பெரியார்களில் சிலரை நினைவிற் கொள்வோம்.

பூமி உருண்டையைக் கண்ட கலிலியோ, நீராவியைக் கண்டு பிடித்த வாட்ஸ், கதிர்களைக் கண்டுபிடித்த ராண்ஜன், ரேடியம் கண்டு பிடித்த மேரி க்யூரி போன்றவர்களும் இன்னும் சர் ஹாம்பரிடேவி, லூயிபாஸ்டியர், ஜே-பி-எஸ். ஹால்டேன், ஐன்ஸ்டாலி போன்றவர்களும் விஞ்ஞான வளர்ச்சியின் படிக் கற்களாக அமைந்து விஞ்ஞானத்தை விளக்கினர்.

நம் நாட்டிலும் விஞ்ஞானிகள் தோன்றினர். பிற நாடுகட்கு எடுத்துக்காட்டாக விளங்க. குறிப்பிடத் தக்கவர்கள் ஸர் ஜகதீச சந்திர போஸ், ஸர்-ஸி-வி. ராமன் போன்றவர்களுமாம்.

இவர்கள், மெய்ஞ்ஞானத்தையே பெரிதும் வளர்த்த நம் நாட்டில் தோன்றியதால் விஞ்ஞானத்தைத் தீயதிற்குப் பயன் படுத்தாது நலமுற்றதிலே பயன் படுத்திக் காண்பித்தனர். ஆனல் பிற நாடுகளில்தான் பிற நாடுகளில்தான் தீயதிற்கும் பயன் படுத்தத் துவங்கினர்.

விஞ்ஞானத்தினுல் இதுகாறும் நன்மையே யுண்டாக்கிய மனிதன் தீமையை உருவாக்கத்தலைபட்டு விட்டான்.

விஞ்ஞானத்தினுல் எவ்வளவுக் கெவ்வளவு வியக்கத் தக்க பயனுள்ள நன்மைகளைக் கண்டு பிடித்தார்களோ அவ்வளவிற் கவ்வளவு இன்று தீமை செய்யவுந் துவங்கி விட்டனர்.

எந்த ஆசை நல் விஞ்ஞானத்திற்கு அடிகோலி நலன் பல விளைவித்ததோ, எந்த சுய நலம் பயனுள்ள புதுமைகளைக் கண்டு பிடித்துப் பயன் மிகத் தந்ததோ, எந்த அறிவு இயற்கையை ஏற்ற முறையில் பயன்படுத்த வகை செய்து நலன் தந்ததோ, பொதுவாக எந்த சக்தி நம் மனித குலத்தை உயர்த்தியதோ அந்த சக்தி, அந்த அறிவு, அந்த சுய நலம், அந்த ஆசை, இன்று பிறந்து பயங்கர சூழ் நிலையை மக்கள் மன்றத்தில் உருவாக்கி இருத்தியிருக்கின்றது

பிறருக்கு இடையூறு ஏற்படா வகையில் தனது சுய நல ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய-செய்து கொண்ட பகுத்தறிவு படைத்த மனிதன் அந்தோ! இன்று 'பிறரை இன்னலுக்குட் படுத்தியாகிலும் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்'' என்ற தீய எண்ணத்தின் அணைப்பிலே ஆனந்தக் கூத்திடுகிருன்

தனது தீய ஆசை நிறைவேற, ''தனக்கு எல்லோரும் அடிமையாகிக் கீழ்ப்படிய வேண்டும்'' என்ற பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொல்வதற்கும் தயங்குவதில்லை.

உலகைக் குறுகிய பாப்புள்ளதாக உருவாக்கிக் காட்டும் ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்த மனிதன் அதனுடன் ஆயிரமாயிரம் மக்களை அச்சத்திலாழ்த்தவும் வீழ்த்தவும் செய்யும் அணுகுண்டையும் அயிட்ரசனையும் கண்டு பிடித்தான் என்னும்போது மனித குலம் தனது எதிர்காலத்தை எத்தனை ஆபத்திற் குள்ளாக்க முயலுகின்றது என்பதைப் பாருங்கள்.

தன்னை நல்ல முறையில் வாழ்வித்துக் கொள்வதிலேயே முயற்சி யெடுத்த-யெடுக்க வேண்டிய மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்வதிலுமா போட்டியிடுவது.

எந்தவொரு நாடும் தேவைகள் மிகுந்த இக்காலத்தில் தனித்து வாழ முடியாது. ஒன்றை யொன்று எதிர் பார்த்துத்தானே வாழவேண்டும். அவ்வாறுயின் உலகம் ஒரு குடும்பமல்லவா?

ஒருவனுடைய மணக்கோலம் எவ்விதம் குடும்பத்தையே மகிழ்ச்சியிலாழ்த்துகிறதோ, அவ்வாறே ஒருவனுடைய மரண நிலையும் அக் குடும்பத்தினரைப் பாதிக்கச் செய்யுமன்றோ!

ஒருநாட்டு மக்கள் அழிந்தால் அது மற்ற நாடுகளையும் பாதிக்கு மல்லவா? என்னே அறிவீனம்.

பலப்பல அறிஞர்கள் இந் நிலை தீரவேண்டும். இன்ப நிலை கொழிக்க வேண்டும் இறை நினைவு செழிக்க வேண்டும் என்று பலமுறை கூறியும் எழுதியுமா இந்நிலை.

"இன்னும் எவ்வளவோ நன்மைகளை இந்த விஞ்ஞான அறிவால் காணலாமே அதனை விடுத்து இப்பேரழுக்கான தாழ்நிலைக்கா அதனைப் பயன் படுத்துவது அவ்வாறு பயன் படுத்தும் இவ்வுலகிலும் வாழலாமா! தவறு தவறு" என்று கூறி மாடியினின்றும் வீழ்ந்திறந்தார் ஒரு வெளிநாட்டுப் பேரறிஞர் இந்த இழிநிலையைப் பொறுக்காததுதான் ரூசோ என்ற அறிஞர் "விஞ்ஞான ஆராய்ச்சி செய்ய நல்ல தகுதியுடைய பெரியோர்களையே நியமிக்கவேண்டும்" என்று கூறினர் போலும்.

நல்லவற்றிற்கெனவே வளர்த்த விஞ்ஞானம் இன்று தீயதிற்கெனவும் வளருகின்றது.

இவ் விழிநிலை யொழிந்து விஞ்ஞானம் நல்லவற்றிற்கே பயன்பட்டு வளரவேண்டும்.

மெய்ஞ்ஞானத்திற்கு இழுக்கு உண்டாக்காத நிலையில் மனிதத் தன்மைக்கு, பண்பிற்கு அழிவு உண்டாக்காத வகையில் விஞ்ஞானம் வளர்ச்சியடைதல் வேண்டும்; மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய முறையிலேயே வளர்க்கப்பட வேண்டும்.

"மெய்ஞ்ஞான மேன்மையில் விஞ்ஞானம்" விளங்கவேண்டும்.

இதுவே நாடு நலம் பெற நல்லதொரு வழியாகவும் அமையும்.

வளரட்டும் மெய்ஞ்ஞான அடிப்படையில விஞ்ஞானமும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன ஒரு நாட்டிலுள்ள ஆநிரை கள்வரால் அல்லது பகைவரால் கவரப்படின், அது தூய்மைக் குலைச்சலாகவும் பேரிழப்பாகவும் கருதப்பட்டுக் கடும்போருக்குக் காரணமாயிற்று; ஆன் மடி யறுத்தல் மாபெருங் குற்றமாயிற்று அக் கொலையோ சொல்லவேண்டியதில்லை.

"ஆன்முலை யறுத்த
அறனில் லோர்க்கும்
மாணிழை மகளிர்
கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய
கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற்
கழுவாயு முளவே"

(புறம் 34)

என்றார் ஆலத்தூர்கிழார் எனினும், அது நன்றிமறந்த குற்றத்தை மிகுத்துக் காட்டற்கே யெனவறிக.

தீயன செய்யாத செங்கோன் மன்னரும் வேற்று நாட்டைக் கொள்ளக் கருதின் அந்நாட்டு ஆநிரையைத் தன் மறவர் வாயிலாய்க் கவர்ந்தோம்பினர். சில இடங்களில் ஆவிற்குக் கோயிலெடுத்தும் வழிபட்டனர் இது பகுத்தறிவிழந்த காலத்தில் நிகழ்ந்தது.

ஆவிற்குக் கோவென்றும் பெயர். முல்லை நிலத்தார்க்கு அல்லது இடையர்க்கு ஆ என்னும் பெயரினின்று ஆயர் என்னும் பெயர் ஏற்பட்டது. கோ—பசு (பிங்), எருது (இ. வி. 9072) கோ என்னும் சொல் வடமொழியி லிருப்பதால் அது வடசொல்லாகி விடாது ஆங்கிலத்திலும் அது (A S Cu Ger. Kuh S (Go.) cow என்று வழங்குகின்றது. நூற்றுக் கணக்கான தூய தென் சொற்கள் மேலையாரிய மொழிகளினுஞ் சென்று வழங்குகின்றன. தா என்னும் வினைச் சொல் தனித் தமிழ்ச் சொல் என்பது, உலக வழக்காலும் "தாவென் கிளவி ஒப்போன் கூற்றே" என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் அறியப்படும். ஆயினும், அதன் தொழிற் பெயரான தானம் என்பது வடமொழிச் சென்று வழங்கி வடசொல்லாகக் கருதப்படுகின்றது. தா என்னும் வினை இந்தியில் தேவ் என்றும் இலத்தீனில் தோ (do) என்றும் வழங்குகின்றது Donum, donation முதலிய ஆங்கிலச் சொற்கள் இலத்தீனி லிருந்து வந்தவை. இங்ஙனம் எத்தனையோ சொற்களுள. அவற்றுள் குடி (L Cot) என்பதும் ஒன்று. இதன் விளக்கத்தைக் கால்டுவெல் ஐயரின் ஒப்பியல் இலக்கணத்தின் முன்னுரையிற் கண்டு தெளிக.

கோ—அன் = கோவன் = இடையன்.
"கோவ னிரை மீட்டனன்"

(சீவக 455,)

கோவன் என்னும் பெயர் கோன் என்று குறுகும். அதன்மேல் 'ஆன்' விகுதி பெற்றுக் கோனான் என நிற்கும். கோனார் என்னும் பெயர் குடிப் பெயராய்த் தோன்று தொட்டுத் தமிழகத்தில் வழங்குகின்றது.

கோவன் என்னும் ஆயன் பெயரே திரியாதும், கோன் கோ எனத் தொக்கும், ஈறு கெட்டும் அரசனைக் குறித்தது. குடிகள் ஆக்களும் அரசன் ஆயனும் போல்வர் என்னுங் கருத்தில், அரசன் கோவன் எனப்பட்டான். கோவன் = அரசன். "கோவனும் மக்களும்" (சீவக 1843) அரசன் கையிலுள்ள செங்கோலும் அவன் ஆயன் போன்றவன் என்னுங் கருத்தை வலியுறுத்தும். கிறித்தவரின் சமயாசாரியர் ஆங்கிலத்தில் **Shepherd** என்றும் **Pastor** என்றும் அழைக்கப்பட்டதும் இக் கருத்துப் பற்றியே. கடவுள் அனைத்துலகுக்கும் அரசனானதாலும் ஆயன் ஆநிரையைக் காப்பதுபோல் அவர் மக்களைக் காத்து வருதலாலும், அவரும் கோவன் எனப்பட்டார்.

கோவன் = சிவன் (அக. நி.)

பசு என்னும் வடசொல் கொள்கை நூலில் மக்களை அல்லது உயிர்களைக் குறிப்பது கவனிக்கத்தக்கது. ஆயா என்னும் தமிழ்ச் சொல் காட்டுப் பசுவைக் குறிக்கும். ஆ என்னும் பெயர் னகரச் சாரியை பெறின், ஆமா என்பது ஆன்மா என்றாகும். ஆனாகிய மா என்பது இதன் பொருள். இச் சொல்லே வடமொழியில் ஆத்மா என்றாகும். ஆன்மா என்னும் தென்சொல் உயிரையும் ஆத்மா என்னும் வடசொல் உடம்பையும் சிறப்பாய்க் குறித்தலை நோக்குக.

கோ என்னுங் குறைச்சொல் அரசனையுந் தந்தையையுங் குறிக்கும். "நின்கோ வரினும் இங்கே" (கலி 116) என்னுமிடத்தில் தந்தையைக் குறித்தது.

இனி ஆனிலையுலகம் என்று மேலுலகத்தின் ஒரு பகுதி பெயர் பெற்றது, காமதேனு என்னும் கற்பித ஆ பற்றியோ, கண்ணன் பற்றியோ, வேறு காரணம் பற்றியோ, அறிகிலம்.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழர்க்கு ஆவொடு தொன்றுதொட்ட தொடர்புண்டென்றும், ஆவென்னும் பெயர் போன்றே கோவென்னும் பெயரும் தனித்தமிழ்ச் சொல்லென்றும், வடமொழியி லிருப்பவை யெல்லாம் வடசொல்லல்லவென்றும், ஆரியஞ் சென்று வழங்கும் தமிழ்ச்சொல் பலப்பலவென்றும், ஆவின் அருமை பெருமையைத் தமிழர் செவ்வனே யறிந்து அதற்குத்தக அதனைப் போற்றி வந்தனரென்றும், மக்கள் ஆட்களாகவும், அரனும், கடவுளும் ஆயராகவுங் கருதப்பட்டனரென்றும், இக்கருத்தே உயிர்கள் ஆன்மாவென்று தென்மொழியிலும், பசுவென்று வடமொழியிலுங் குறிக்கப் பெற்றமைக்குக் காரணமென்றுந் தெரிந்து கொள்க.

# உணர்வின் உயர்வும் தாழ்வும்

இயற்பகை.

பிணையிலிருந்து விடுதலையடைந்து தெய்வ இயக்கத்தில் சேர்ந்துகொள்வதுதான் யோகத்தின் அறிகுறி. இயற்கையின் ஆதிக்கத்தில் உயிர் ஒரு அறிவற்ற அடிமையாகவும், ஆதாரவற்ற நிலையிலும் இருக்கிறது. யோகத்தினால் இம்முறையிலிருந்து விலகி, வேறொரு உணர்வு நிலைக்கு உயர்ந்து சென்று, அங்கு உயர்நிலையின் பொருட்டுச் செய்யப்படும் வேலையில் உயிர் பங்கெடுத்துக் கொள்வதாகவும், செயல் புரிவதாகவும் ஆகிறது. இவ்வுணர்வின் இயக்கமானது (**Movement Of Consciousness**) இருவித போக்கையுடையது. முதன் முதலாக நடைபெறுவது ஒரு உயர்வு. உயிர் விஞ்ஞான உலகின் உணர்வு நிலையிலிருந்து எழும்பி, உயர் நிலைகட்குச் செல்லுகிறது. கீழுணர்வு இவ்வண்ணம் உயர் நிலை எய்தும்போது அதற்குப் பதிலாக உயர் உணர்வு தாழ் நிலைக்கு வருகிறது. உயிர் இப்புவியிலிருந்து மேனிலை நோக்கிச் செல்லும்போது புவியின் பழைய இயற்கையை உருமாற்றக் கூடிய ஒரு ஒளியையோ, சக்தியையோ, மேலேயுள்ள எதையோ ஒன்றை உயிர் இவ்வுலகுக்குக் கொண்டு வருகிறது. பிறகு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல பிரிந்துள்ளவைகளே. அதாவது, தன்னிடமுள்ள மேன்மையும், தாழ்மையும் உயிர் (ஜீவன்) உணர்வு இவைகளின் உள்ளடுக்குகளும் வெளி அடுக்குகளும் (**The inner and the outer strata of your being aud consciousness**) எல்லாம் நெருங்கி மெல்ல மெல்ல சேர்ந்து ஒரே உண்மையிலும் ஒரே இசைவிலும் கலக்கின்றன.

உலகில் எண்ணிறந்த உணர்வு நிலைகள் (**Planes of consciousness**) இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனி விதிகளுண்டு. இந்த உடல் நிலையில் வேறொரு உணர்வும் அதன் ஆற்றல்களும் — பெருவாரியாக உயிர் நிலைகளின் சக்திகளும் திடீரெனத் தாழ் நிலைக்கு வந்து செயலாற்றுகிறது. அவ்வாறு ஏற்படுவது இந்த உடல் நிலைகளின் அமைப்பின் (**the material mechanism**) மீது உயர்ந்த உயிர் நிலைகளின் அமைப்பு (**the mechanism of a higher plane**) திடீரெனக் கவப்பதேயாம். அஃது ஒருமின் வெட்டைப்போல சதாரண உணர்வின் நிலையை ஊடுருவிச் சென்று விளைக்கும் விளைவே அற்புதம் எனப்படும்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், கி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)